[முற்பகல் 11-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

மற்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளை எடுத்துக்கொள்ளப் படும்.

(4) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973ம் ஆண்டு, ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.